பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 10 வெள்ளிக்கிழமை (27.07.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 240

# பாதுகாப்புத் தடைகள், சோதனைகளால் பொருள்கள் தட்டுப்பாடு; விலையேற்றம்

## விநியோகம் தாமதமாவதால் வன்னி மக்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 27

இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வடக்கில் மீண்டும் கடும் மோதல்கள் தொடங்கிவிட்ட சூழ்நிலையில் -

பாதுகாப்புத் தடைகள், சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாலும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களையும் அடக்கிய வன்னியில் -

எரிபொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளன.

இராணுவ சோதனை நிலையங்களில் பொருள்களை கீழே இறக்கி ஏற்றுவதால் வீண் தாமதங்கள் உண்டாகின்றன. அதனால் பொருள்களின் விநியோகம் காலதாமதமாகின்றது - என்று தொண்டர் நிறுவன அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூலை 27

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சேது சமுத்திரம் (இராமர்அணை) பாலத்தை தகர்க்கும் அரசின் திட்டத்தை இந்து அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராமபிரானால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் பாலத்தை உடைக்க எடுக்கும் முயற்சியைக் கண்டித்து விஸ்வ இந்துப் பரிஷத் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

அடுத்த மாதம் 26ஆம் திகதியன்று ராமேஸ்வரம் அலைகள் அமைப்பு ஒன்றை

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுக் குளம் பகுதியில் நேற்று இரு தடவைகள் விமானக் குண்டு வீச்சு

கொழும்பு,ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டானுக்கு வட மேற்கே முத்தையன் கட்டுக்குளப் பகுதியில் நேற்று இரு தடவைகள் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

முதலில் காலை 9.10 மணிக்கும் பின்னர் நண்பகல் 12.10 மணிக்கும் இரு தடவைகள் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சை நடத்தின.

அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பாடசாலை நாசமாக்கப்பட்டது என விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்தசில்வா தெரிவித்தார்.

இத் தாக்குதலின் போது எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்றும் பொது மக்களின் விவசாய நிலங்கள் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

(அ-1-ரி)

## ஜேர்மன், சுவிஸ் நாடுகளில் 'சாவிலும் வாழ்வோம்' எழுச்சி!

ஜெனிவா,ஜூலை 27

ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்துவாழும் ஈழத் தமிழர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை அங்கு 'சாவிலும் வாழ்வோம்' எழுச்சி நிகழ்வை நடத்தினர். ஈழத் தமிழர்கள் மீது அரச படைகளால் மேற்கொள்ளப்படும் படுகொலைகள், வன்முறைகளை உலகறியச் செய்யும் நோக்குடன் - கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு - இந்த கவன ஈர்ப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

சுவிஸின் ஜெனிவா நகரில் ஐக்கிய நாடுகள் சபை முன்றிலில் 'கறுப்பு ஜூலை' நினைவுகளுடன் 'சாவிலும் வாழ்வோம்' கவன ஈர்ப்பு நிகழ்வு புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் 1983 இல் சிங்களப் பேரினவாதம் பலிகொண்ட தமிழ்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஆதரவாளர்களும் ஆங்காங்கே பேரணி!

### எனினும் முறுகல் ஏதும் இல்லை

கொழும்பு, ஜூலை 27

அரசிற்கு ஆதரவளிக்கும் வகையில் அரசின் முக்கிய அமைச்சர்களின் தலைமையில் ஸ்ரீல.சு. கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நேற்று நடத்தியிருந்தனர்.

கொழும்பு கிரான்ட்பாஸ் பகுதியில் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தலைமையிலும் களனி அமைப்பாளர் அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அரசிற்கும் படையினருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களை எதிர்க்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி தென்பகுதியின் 150 நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 230 பேருக்கு வடக்கில் நியமனம் கிடைக்கும்

திருகோணமலை,ஜூலை 27

வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கு கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 230 பேர் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுதல் அனுப்பப்படுகின்றன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதற்கென நேர்முகப் பரீட்சைகள் மே, ஜூன் மாதங்களில் நடத்தப்பட்டிருந்தன.

அவர்களுக்கு ஜூன் மாதம் 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆசிரிய நியமனம் வழங்க முன்னர் ஏற்பாடாகியிருந்தது.

நிதி நெருக்கடி காரணமாக திறைசேரி இந்த நியமனங்களைச் செய்வதற்கு அனு

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் 26 உப தபாலகங்களை மீளத் திறப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஜூலை 27

வடக்கு - கிழக்கில் கடந்த கால வன்செயல்கள் காரணமாக மூடப்பட்ட 26 உப தபால் நிலையங்களையும் மீளத் திறப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்ப்பித்த பத்திரத்தை ஆராய்ந்த அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிராகக் கொழும்பில் நேற்று மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி!

## ஐ.தே.க. - மங்கள ஆதரவாளர் 50 ஆயிரம் பேர் திரண்டனர்



கொழும்பு, ஜூலை 27

ஐக்கிய தேசியக் கட்சி - மங்கள சமரவீர தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த அரச எதிர்ப்புப் பேரணியில் - மக்கள் எழுச்சிப் பேரணியில் - 50 ஆயிரம் மக்கள் திரண்டு அரசுக்கு எதிரான தமது கண்டனக் குரலை எழுப்பியிருக்கின்றனர்.

கொழும்பு பொரளையிலிருந்து நேற்றுமதியம் ஆரம்பமான பேரணியிலும் பின்னர் 'ஹைட்பார்க்' மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தப் பேரணியில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களுமாக பல்லாயிரக்கணக்கானோர் திரண்டனர். மதியம் ஒரு மணியளவில் பொரளையிலிருந்து ஆரம்பமான பிரதான பேரணியில் அரசுக்கு எதிராக - ஆளுந்தரப்பின் ஊழல் மோசடிகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. பேரணிகளில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். ரணில், மங்கள, சிறிபதி உட்பட பல முக்கியஸ்தர்களின் பெரியளவிலான 'கட் அவுட்' களையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

மதியம் சுமார் 1.30 மணியளவில் பொரளையில் ஆரம்பமான பிரதான பேரணி புஞ்சி பொரளை, டீன்ஸ்வீதி, நகரசபை மண்டபம், லிப்டன் சதுக்கம் ஊடாக 'ஹைட் பார்க்' மைதானத்தை மூன்று மணியளவில் வந்தடைந்தது.

பிரதான பேரணியைத்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சனசமூக நிலையங்களுக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2006, 2007 ஆகிய ஆண்டுகளுக்குரிய நன்கொடைக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை இக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் நிலைய ஆவணங்களுடன் வருகை தருமாறு கேட்கப் பட்டுள்ளது.

நன்கொடையைப் பெற்றுக்கொள்ளத் தவறும் சனசமூக நிலையங்களின் நன்கொடை திருப்பி அனுப்பப் படுமெனவும் தெரி விக்கப்பட்டது.



## ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஸ்ரீ அம்மா பகவான் அறநெறி சத் சங்கத்தினால் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெற்றுவந்த தியான நிகழ்வுகள் 28.07.2007 இல் இருந்து யாழ். இந்து ஆரம்ப பாடசாலை தியான மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். இவ்வாரம்ப நிகழ்வு 2.30 மணி தொடக்கம் 5.30 மணிவரையும் நடைபெறும்.

ஸ்ரீ அம்மா பகவான் பொற்பாதங்களில்
ஸ்ரீ கல்கி ஆன்மீகமையம் - யாழ். கிளை
மணியர்பதி லேன், கொக்குவில் மேற்கு.
தொ.பே. 021 222 2935

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அமிர்தலிங்கம் துரைசிங்கம்**

*திதி: திரயோதசி (27.07.2007)*

**தோற்றம்: 17.02.1913**
**மறைவு: 21.07.2002**

"வாழ்ந்தாய் வாழ்ந்து காட்டினாய் வளம் பல கொண்டு
வாழ்ந்து பார்க்கவே எமை ஊக்கிய உமக்கு உளப்பலமுண்டு
முழு வாழ்க்கைக்கு நீ எழுதிய முன்னுரை எளிமை
எழும் உயர்வுக்கு நீதந்த உபதேசம் பணிவு
தொழும் உழைப்புக்கு நீதந்த உருவம் உறுதி
உளமகிழ்ச்சிக்கு நீதந்த மருந்து திருப்தி"

களத்த மனதுடன் உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*'லிங்க நேய',*
*எழுதுமட்டுவாள்.* (62954)

## வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

நவாலி, ஜூலை 27

நவாலியில் 3 கிலோ வெங்காயம் 20 ரூபாவாக விற்கப்படுகிறது.

மேலும் தடலுடன் கட்டிய வெங்காயக் கட்டு வண்டில்களிலும் லான்ட் மாஸ்ரர்களிலும் ஏற்றிவந்து வீட்டுக்கு வீடு 40 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

(1-100)

## 90 ஆம் நாள் நினைவுகள்

**செல்வராஜா ரஜிவர்மன்**



பத்திரிகைத்துறையின் படிகள் தனில் ஏறி
முத்திரை பதிக்கவென முனைந்தாய்,
ஒரு நாள் நீ
நித்திரை நீங்கியபின் நிலையம் திரும்புகையில்
அத்தனைக் கனவினையும் அழித்தார் - நீ
எத்தனை காலம் நீங்கினாலும் வாழ்வாய்!

உதிப்பு: 17. 01.1982
அழிப்பு: 29.04.2007

*உன்னையும் உன் புன்னகை தவழும்*
*முகத்தினையும் என்றும் மறவாத*
**'உதயன்' நிர்வாகத்தினரும், பணியாளர்களும்.**

(சி-53045)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வைத்திய கலாநிதி
**விசர்கசுந்தரம் குணானந்தம்**

**திதி - 26.07.2007**
**தோற்றம் - 10.01.1946**
**மறைவு - 06.08.2006**

ஏங்குகிறது ஏங்குகிறது எங்கள் இதயம்
பொங்குகிறது பொங்குகிறது விழிகளில் கண்ணீர்
தோய்கிறது தோய்கிறது இரக்கத்தில் நெஞ்சம்
மாய்கிறது மாய்கிறது துன்பத்தில் குடும்பம்

கட்டுக் கட்டாய் கதைகள் சொல்வீரே
விட்டு விட்டு எங்களைச் சென்றீரே
தொட்ட உறவுகள் வாட்ட முறப் பிரிந்தீரே
எட்டா வீட்டிற்கு இறைவனிடம் சென்றீரே

பார் போற்றும் நாம்பியல் நிபுணரானீரே
பேர் சொல்லும் பேராசான் ஆனவரே
ஊர் திரண்டு வழியனுப்ப வைத்தீரே
கார் புரண்டு விழிநீராகச் செய்தீரே

கல்வி விரும்பியவர்க்கு புகட்டிட வந்தீரே
கருவி கருவித்து பல நோய்களை தீர்த்தீரே
செல்வி உன்வழியைப் பற்றிப் படிப்பித்தீரே
அருவி எம்விழியில் மேய்ந்திடச் சாய்ந்தீரே

விரும்பிய நெஞ்சங்கள் உறங்காது மாய்கிறது
மயங்கிய நிலையிலேனோ மரணைச் சந்திக்கது
வெதும்பிய உள்ளங்கள் உனைக்காண ஏங்குகிறது
நொருங்கிய இதயங்கள் உதிரத்தைச் சிந்துகிறது.

நல்வழி இதுதான் என்று வழி காட்டினீரே
செல்வழி நல்லதாக வேண்டும் என்பீரே
உன்வழி சமுதாய மேம்பாடென விளித்தீரே
என்வழி கண்டிட முன் புறப்பட்டுப் போனீரே

உங்கள் பிரிவால் வாடும்
நெஞ்சங்கள்
செல்வராணி குணானந்தம்,
துஷித்தா, சுரேன், கேரிஸ்.

22, Tomkyns Close
Chandlers Ford, Hampshire SO534HL,
UK. Tel: 0044 2380253105. (62963)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை
**ஆசிரியர் சி. முரளீதரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**இ. சிவலிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய வேலணை பெருங்குளத்து முத்துமாரி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்,
வேலணை. (62964)

## தவறிவிட்டது

இல. 91, சின்னக்கடை, மன்னார் என்னும் முகவரியைச் சேர்ந்த திருநாவுக்கரசு ரமிலா என்பவரது தேசிய அ. அட்டை (856603105v), விசேட அ. அட்டை, கப்பல் பயண சீட்டு மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் நேற்று (26.07.2007) வியாழக்கிழமை [illegible] சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், கொக்குவில் சந்தி அல்லது கங்காதரன் விடுதி, சிவப்பிரகாசம் வீதி, யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (62962)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா சின்னத்துரை**

என் அன்புத் தெய்வமே!
மாதம் ஒன்று ஆனாலும் உன்னை
என்னால் மறக்க முடியவில்லை!!
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*தோற்றம்: 1950. 12. 29*
*மறைவு: 2007.06.27*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு,
சுன்னாகம். (சி-53045)

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் சுதாகரன்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் (பரிஸை) வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சுதாகரன் (சூரி) 25.07.2007 இல் காலமானார்.

அன்னார் தர்மலிங்கம்-நவமணி தம்பதியரின் புதல்வரும் ராதாவின் அன்புக்கணவரும் ராகவி, லக்ஸனா, சரண் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன் (பாபு), ரமணி (பாப்பா), சுபாஸ்கரன் (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. பாஸ்கரன் (பாபு)

இல. 19, திருவள்ளுவர் வீதி,
உக்கிளான் குளம்,
வவுனியா.
தொ.பே. 024 4588332. (67959)

திருமதி
### பாலகிருஷ்ணன் சுகிர்தரஞ்சிதமலர்



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தரஞ்சிதமலர் பாலகிருஷ்ணன் நேற்று (26.07.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணனின் (C.T.B.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம் - மீனாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் பூலோகசிங்கம், கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இலட்சுமணன் மற்றும் ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் நிர்மலா, சுரேஸ்குமார் (இ.போ.ச - பருத்தித்துறை), பகீரதன் (இ.போ.ச. -காரைநகர்), உதயகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயும் கமலினியின் அன்பு மாமியும் தருக்சிகாவின் அன்புப் பேர்த்தியும் இந்திராணி, லலிதாம்பிகை, வரதராஜன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (62955)

## 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
1932
★
09
★
20



மறைவு
1996
★
07
★
27

**திருமதி இராயப்பு சந்தலூசியா செல்வம்**

காலமெல்லாம் எம்மைக் கண்ணுள்
வைத்துக் காத்து வந்த அன்புத் தாயே
எம்மை விட்டுப் பிரிந்து
பதினொரு வருடங்கள் சென்றாலும்
உம் நினைவுகளும் உம் உருவமும்
எம்மை விட்டு என்றும் அகலாது
அம்மா உமது ஆன்மா சாந்தியடைய
என்றும் எல்லாம் வல்ல இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால்
துயருறும்:
அன்புக் கணவர்,
மகன், மகள்மார்.

*போயிட்டி,*
*இளவாலை.* (62901)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் கனகம்மா (அளவெட்டி)



அளவெட்டி, கும்மாளையை சொந்த இடமாவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகம்மா 24.07.2007 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் நல்லம்மா, அருளானந்தம், பரமானந்தம், சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான முருகானந்தம், சிவானந்தம், சத்தியானந்தம் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதனையும் அளவெட்டியில் அவரின் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. அருளானந்தம்
(மகன்).

*தம்பகலட்டி,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.* (62958)

### இராசதுரை சிவலிங்கம்

*( முன்னாள் கிளை முகாமையாளர்,*
*தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்)*



கட்டுவன், தண்ணீர் தாழ்வைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சிவலிங்கம் 25.07.2007 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் பத்மாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவாஜினி (கனடா), முரளீதரன் (ஆசிரியர், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்), தர்சினி (ஜேர்மனி), கஜந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சபேஸ் (கனடா), கேதீஸ்வரன் (ஜேர்மனி), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மகேந்திரனின் (மஸ்கன் லிமிடெட்) அன்பு மைத்துனரும் சயந்தன், சஜீபன், சயானி, சௌமியா, சோபிகா, ஜெனோபிகா, கரணிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் குப்பிளான் இந்து மையானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சி. முரளீதரன் (மகன்).

*குப்பிளான்,*
*ஏழாலை.* (62941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

வலி.தென்மெற்கு,ஜூலை27

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப் பனை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (1-135)

* * *

வலி.தென்மெற்கு,ஜூலை27

பண்டத்தரிப்பு காலையடி ஞான வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை விசேட பூசை வழிபாடுகள், சங்காபிஷேகம், திருக்கல்யாணம், திருவீதி உலா என்பன இடம்பெறவுள்ளன. நண்பகல் மகேஸ்வர பூசை (அன்தானமும்) நடைபெறவுள்ளது. (1-135)

* * *

குருநகர்,ஜூலை27

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத் திருவிழாத் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணைநாதர் வழிபாடு நடைபெறும். (1-51)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை27

சாவகச்சேரி கற்குழி கந்தசாமி ஆலய பெருந்திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1-207)

# இணைத்தலைமைகள் ஒதுங்கி நிற்கும் செய்தியில் உண்மை இல்லையாம்

## வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு,ஜூலை27

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினர் ஒரு தீர்மானம் எடுக்கும் வரைக்கும் இலங்கை விவகாரங்களிருந்து தூர விலகி நிற்பது என்று இணைத் தலைமைநாடுகள் தீர்மானித்திருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளில் உண்மையில்லை என்று வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

எம்மைப் பொறுத்தவரை அவ்வாறான தகவல் எதுவும் இணைத் தலைமை நாடுகளிடமிருந்து எமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அமைச்சர் மேலும் கூறினார்.

அமைதி முயற்சியை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அமைதியில் அரசு அர்ப்பணிப்புடன் இருப்பது சர்வதேச சமூகத்திற்கு நன்றாகத் தெரிந்த விடயம் என்று கூறிய அமைச்சர் போகொல்லாகம மேலும் கூறியதாவது:-

சர்வகட்சி மாநாட்டு செயற்பாடுகள் முனைப்பாக முன்னேறிவருகின்றன. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பெரும்பான்மை கட்சிகளால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி முன்வடிவு தயாராகிவிடும். சர்வகட்சி செயற்பாடுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் ஆதரவளித்து வருகிறார்கள். இந்த விடயங்கள் இணைத் தலைமை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் விளக்கப்பட்டுவருகின்றன.

சிங்கப்பூர் செய்தி சேவை ஒன்றுக்கு ஏற்கனவே அமைச்சர் அளித்திருந்த பேட்டியொன்றில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் ராணுவ ரீதியில் எதிர்கொள்ளப்படும். இருந்தாலும் பேச்சுவார்தைகளுக்கு அவர்கள் வரவேற்கப்படுவார்கள். புதிதாக விடுவிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணம் ஜனநாயகத்தின் பன்முகத்தன்மையை வெளி உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் அமையும் என்று கூறியிருந்தார்.

கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதில் அரசுடன் இணைந்து கொள்ளும்படி சர்வதேச சமூகத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

(ப)

# கடத்தப்பட்ட தமிழர் பூஸாவில்!

கொழும்பு,ஜூலை27

இனந்தெரியாத நபர்களால் கடந்த மே மாதம் கொழும்பில் வைத்து நீல நிற வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டார் என்று கூறப்படும் நபர்ஒருவர் தற்போது பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்று தகவல் வெளியாகியிருக்கின்றது.

கொழும்பு கொட்டாஞ்சேனை சிவானந்த வீதியில் வசித்து வந்த 34 வயதுடைய ராஜரட்ணம் இலங்கேஸ்வரன் என்ற குடும்பஸ்தர் கடந்த மே மாதம் 6 ஆம் திகதி பட்டப்பகலில் வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை நீலநிற வான் ஒன்றில் வந்த நால்வர் அடங்கிய குழுவினால் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இவரது மனைவியும் மகளும் வெளிநாடு ஒன்றில் இருப்பதால் இக்கடத்தல் குறித்து இவரது பெற்றோர்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். பிரதி அமைச்சர் இராதா கிருஷ்ணனிடமும் இது குறித்து தெரியப்படுத்தியிருந்தனர்.

இலங்கேஸ்வரன் தற்போது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்ற தகவல் அவர்களது பெற்றோருக்கு கிடைத்திருக்கிறது.

இதனையடுத்து பூஸாவிலுள்ள கைதிகளை உறவினர்கள் பார்வையிடும் தினத்தில் பூஸாவுக்குச் சென்ற பெற்றோர் தமது மகன் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருப்பதைக் கண்டிருக்கின்றனர்.

மகனுடன் உரையாடியபோது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரே தம்மை வானில் கடத்திவந்து விசாரித்துவிட்டு பூஸா முகாமில் தடுத்து வைத்தனர் என்று அவர் சொன்னார் என்று அவரது பெற்றோர் கூறியுள்ளனர். எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து தமது மகனை விடுவித்துத் தருமாறு பெற்றோர்களான ராஜரட்ணம், புவனேஸ்வரி ஆகியோர் பிரதி அமைச்சர் ராதா கிருஷ்ணனிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.(சி)

# இளம்பெண்களுடன் சேட்டை விட்ட ஐந்து இளைஞர்கள் விளக்கமறியலில்

வல்வெட்டித்துறையில் பாடசாலை மாணவிகள், இளம்பெண்களிடம் சேட்டைவிட்டு வந்த ஐந்து இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிவான் க.அருமைநாயகம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்செய்யப்பட்ட அவர்களை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளைக் கைத்தொலைபேசி மூலம் படம் எடுப்பது, அவர்களது கைத்தொலைபேசி இலக்கத்தைக் பெற்று அந்த இலக்கத்துக்குத் தொடர்பை ஏற்படுத்தி தூஷண வார்த்தைகளால் ஏசுவது, இளம்பெண்களின் சைக்கிள்களை தள்ளிச் சேதப்படுத்துவது, அவர்கள் வீதிகளில் பயணம் செய்யும் போது மோட்டார் சைக்கிள்களைக் குறுக்கே செலுத்திப் பயமுறுத்துவது போன்ற அட்டகாசச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டு வந்ததாகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். (அ-1)






மக்கள் வங்கியின் 'சிசு உதான' சாதனையாளர்களான செல்வி அனுசியா ஆனந்தசிங்கம்(மகாஜனா), செல்வி மைதிலி இராஜரட்ணம்(யூனியன்) ஆகியோருக்கு விருது வழங்கும் நிகழ்வு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேலும் அவரது துணைவியாரும் சிறப்பு விருந்திராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரனும் ஊர்வலாமாக அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும் சாதனையாளர்களுடன் பிரதம விருந்தினர் பேராசிரியர் குமாரவடிவேல்,சிறப்பு விருந்தினர் பி.விக்னேஸ்வரன், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராசா, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ச.கயிலைநாதன், சி.கந்தசாமி, எஸ்.துரைஎங்கரசு, மக்கள் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தன், வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் அ.குகதாசன் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காண்லாம்.

# தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை27

தென்ம்ராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தொகை மதிப்புடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் கல்வி வலயத் திட்டமிடல் பிரிவினரைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை தொகை மதிப்பு படிவங்கள் தொடர்பான பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ளதால் உடனடியாக அதிபர்களையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களையும் வலயக் கல்வி அலுவலகத்திற்க வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (207)

# உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி நெடுந்தீவில் பல்வேறு சமூகப் பணிகள்

நல்லூர்,ஜூலை27

நெடுந்தீவு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பொதுமக்கள் நெருக்கமாகக்கூடும் பொதுச் சந்தை, துறைமுகப் பகுதி, ஆலயங்களின் சுற்றாடல்களைத் துப்புரவு செய்து கழிவுகளை அகற்றும் பணிகளில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் சிக்குன்குனியா, டெங்குக் காய்ச்சல் ஆகியன குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் உள்ளூராட்சி வாரத்தையொட்டி சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் இணைந்து கட்டுரை, சித்திரப்போட்டிகள் கண்காட்சிகள் ஆகியவற்றையும் நடத்தியதாக நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளர் கே.தம்பிராசா தெரிவித்தார்.

மரக்கன்றுகள் நாட்டுதல், குடிதண்ணீர்க் கிணறுகள், வீதிகள் புனரமைத்தல், கணனி இயக்க அறிவூட்டல் போன்ற செயற்பாடுகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. (50-111)

# ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

நவாலி,ஜூலை27

ஆனைக்கோட்டை சம்மந்தப்பிள்ளையார் வீதி, ஞானவைரவர் வீதி மற்றும் நவாலியின் சில பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சிலர் இப்பகுதியில் வீதி விளக்குகள் ஒளிரவிடும் போர்வையில் மின் குமிழ்களைப் பொருத்திவிட்டு அதிலிருந்து நிரந்தரமாகத் தமது வீடுகளுக்கு மின்சாரத்தினைப் பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இப்பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதுடன் வலுக்குறைந்த மின்சாரமும் கிடைப்பதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. அத்துடன் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்களும் பகல் வேளையிலும் ஒளிர்ந்த வண்ணமுள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மின்பாவனையாளர்கள் கேட்டுள்ளனர். (50-100)

# நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை27

கவிஞர் கலாநிதி இ.முருகையனின் 'கர்வபங்கம்' என்னும் மொழிபெயர்ப்பு நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிரதம விருந்திராகக் கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை ஆசிரியர் ஜோன்சன் ராஜ்குமாரும் அறிமுகவுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்துவர்.

ஜி.சீ.ஈ.(உயர்தர) தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கான புதிய பாடத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சொபொகினியின் 'அன்றிகனி' என்னும் கிரேக்க நகைச்சுவை நாடக நூல் இ.முருகையனால் 'கர்வபங்கம்' என்ற தலைப்பில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை27

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலாளர் த.நடராசா கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை27

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளியின் அறநெறிப் பாடசாலை முன்றிலில் இடம்பெறும்.

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயில்வு ஆசியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் ஜூலை மாதக் கொடுப்பனவு வழங்கப்படும்.

உரிய ஆவணங்களுடன் அனைத்து உள்ளகப் பயில்வு ஆசிரியர்களும் சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் 12.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரவும். பிரேரணைகளை 04.08.2007 சனிக் கிழமைக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கும் வண் ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதற்குப் பின் வரும் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

தலைவர் (62163) செயலாளர்.


இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.
அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தரம்) - 2 பாடங்களில் சித்தி
இணையுங்கள் ஜூலை 30இற்கு முன்னர்
Company Secretarial Services(Pvt.)Ltd.
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவயோகம் மகாலிங்கம்**

தோற்றம் 28.05.1953 | மறைவு 18-07-2005


திதி:-பூர்வபக்க திரியோதசி

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் - உம்மை எம் ஆயுள் உள்ளவரை மறவோம்.

2, மருதடி வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம் (62947)

கணவன், பிள்ளைகள்
சகோதரர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா இராசையா**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

பார் புகழ வாழ்ந்து வந்தீர்!
பண்புடனே வளர்ந்து வந்தீர்!
கரம்கூப்பி வேண்டுகின்றோம்!
காலமெல்லாம் தங்கள் ஆசி

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (62929)

-குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

களபூமி, காரைநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த இராமுப்பிள்ளை நடராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (563652594V), விசேட அடையாள அட்டை (0913010818) மோட்டார் சைக்கிள் புத்தகம், என்பன 24.07.2007 அன்று சங்கானைக்கும் சித்தன்கேணிக்கும் இடை யில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறிவரதலக்ஷ்மி வெதுப்பகம், காளுவன்சந்தி, சுழிபுரம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (62942)

## தவறிவிட்டது

4 பவுண் நிறையுள்ள வெள்ளை முத்துச் செயின் மிகுதி பவுணுடன் மஞ்சள் நிறப் பையுடன் நேற்று (26.07.2007) வியாழக்கிழமை காலை குளப்பிட்டிச் சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் நியூ கிருஷ்ணா நகைத் தொழிலகம், இருபாலைச் சந்தி, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(62951) T.P.: 077 6204587, 021 222 7476

## திருத்தம்

'சக்கோட்டை (அல்வாய் வடக்கு) சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டடப் பொருள் களுக்குரிய கூறுவிலை கோரல்' என்ற தலைப்பில் 24.07.2007 திகதிய உத யனில் 2ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் - ஏழாவது வரியை அலு வலகத்தில் உள்ள கேள்விப் பெட்டி யிலோ இடலாம் என்று சேர்த்து வாசிக் கவும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 27 - 05 - 1938
ஆண்டவன் அடியில் 27 - 06 - 2007

**திருமதி பூமணி முத்துக்கிருஷ்ணர்**

*(இளைப்பாறிய பிரதி அதிபர், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)*

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், எமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும், பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (27.07.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனதிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணக்கர் வளவு,
கந்தரோடை, சுன்னாகம். (62936)

குடும்பத்தினர்.

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 * 07 * 1936
மறைவு 22 * 07 * 1991

**திருமதி இராசசிரோன்மணி இராசையா**

திதி: பூர்வபஷ்ஷ திரயோதசி(27.07.2007)

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் சிகரமாய் அவனியில் உத்தமியாய்
எமது உள்ளத்தில் நிலைபெற்ற எம் இதய தெய்வமே
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்றதேனோ!
இப்புவிதனில் நாம் உள்ளவரை எம் உள்ளங்களில்
உம் நினைவு என்றும் அழியாதம்மா.

என்றும் உங்கள் நினைவில்:

சரசாலை மத்தி,
சாவகச்சேரி. (62914)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையின் ஆங்கில தினவிழா

வலி தென்மேற்கு ஜூலை 27

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை யில் ஆங்கில தின விழா கடந்த வாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆங்கில மாணவர் மன்றத் தலைவி இ.நிரோஜினி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலிகாமம் கல்வி வலய ஆங்கில மொழி உதவிக்கல்விப் பணிப்பா ளர் எஸ்.கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி களில் வெற்றிபெற்ற 22 மாணவர்களுக் கான பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப் பட்டன.

(50-135)

## உணவக உரிமையாளர்களுக்கு சுகாதாரக் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு,ஜூலை27

பண்டத்தரிப்பு, இளவாலை, சண்டிலிப் பாய் ஆகிய மூன்று பொதுசுகாதார பரிசோ தகர்கள் பிரிவுகளிலும் உள்ள உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர் கள் மற்றும் பணியாளர்களுக்கான சுகாதார விழிப் புணவர்வுக் கருத்தரங்கு கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு பட்டின சபை உப அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

அலுவலக பொறுப்பதிகாரி ஞா.தேவச் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளப்படும் நிலையங்களில் மேற்கொள் ளப்பட வேண்டிய சுகாதார விதிமுறைகள் பற்றி விளக்கமளிக் கப்பட்டதுடன், அறி வுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டச் சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் எஸ்.பிரணவன், பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன், இளவாலை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.உமாசுதன், சண் டிலிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.சோழன் ஆகியோர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங் கினார்கள்

(50-135)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் அறிமுகம் 19 * 10 * 1935
தெய்வத்துள் சங்கமம் 08 * 08 * 1995

**அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா**

திதி: 27.07.2007

*பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்*
*எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி*
*அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!*
*நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து*
*பன்னிரண்டு ஆண்டுகள் அல்ல எத்தனையோ*
*ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள்*
*நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை*
*விட்டு என்றும் மாறாதையா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

சந்தையடி,
மானிப்பாய். (62927)

அன்பு மனைவி, மைத்துனர்கள், சகோதரிகள், மைத்துனிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 * 07 * 1984
இறப்பு 27 * 07 * 2006

**செல்வன் மரியதாஸ் மனோஜன்ராஜ் (ராசா)**

(வீரகேசரி, மித்திரன், மெற்றோநியூஸ், தினக்குரல், யாழ்.விநியோகத்தர்)

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் நீங்காது உன் நினைவு. என்றும் உன் நினைவுகளுடன்

இன்று (27.07.2007) வெள்ளிக்கிழமை புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 6.15 மணிக்கு நடை பெறும். திருப்பலியைத் தொடர்ந்து எமது இல்லத் தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தென்மூலை,
அச்சுவேலி. (62911)

அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, உற்றார், உறவினர், நண்பர்கள்.

## நினைவஞ்சலி

**31ஆம் நாள்**



மலர்வு 02 ★ 05 ★ 1909
உதிர்வு 27 ★ 06 ★ 2007

**திருமதி கந்தையா சின்னப்பிள்ளை**

**11ஆம் ஆண்டு**



மலர்வு 19 ★ 07 ★ 1944
உதிர்வு 07 ★ 11 ★ 1997

**திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்**

(ஓய்வுபெற்ற எழுதுநர், யாழ் மாநகரசபை)

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

இல.48, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

மருமகன், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(62970) தகவல். **வே.அம்பலவாணர்** *(மண்டை தீவு).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆஸ்திரேலியாவின் தலைநகர் மெல்போர்ணில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை கவனயீர்ப்பு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஆஸ்திரேலிய பிரஜை ஒருவர் உரையாற்றுவதையும் நிகழ்வில் ஈடுபட்ட புலம்பெயர் வாழ் தமிழ் மக்களையும் படங்களில் காணலாம்.

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மானிப்பாயில் நூலகக் கண்காட்சி

வலி.தென்மேற்கு,ஜூலை27

வலி.தென்மேற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தும் நூலகக் கண்காட்சி மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா இந்த நூலகக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

(50-135)

# கடலை வாங்கினால்தான் அரிசி நிபந்தனை விதிக்கும் சங்கக் கடைகள்

## ஏழை மக்களின் அன்றாட வாழ்வு அந்தரத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை27

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலகத்தால் வழங்கப்பட்ட அரிசி நிபந்தனையின் அடிப்படையிலேயே விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ். செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரிசியை எந்தவித நிபந்தனையும் இன்றிப் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யவேண்டுமென யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கடந்த 23ஆம் திகதி பத்திரிகைகள் மூலம் அறிவித்திருந்தார்.

ஆயினும் இந்த அறிவித்தல் வெளியான பின்னரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிபந்தனையின் அடிப்படையிலேயே அரிசியை விற்பனை செய்து வருவதாகப் பாவனையர்கள் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி, கைதடி, கட்டைவேலி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் உட்பட சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிபந்தனையின் அடிப்படையில் அரிசி விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

மேற்படி கிளைகளில் அரிசியைக் கொள்வனவு செய்யச் செல்லும் பாவனையாளர்களிடம், கிளைகளின் முகாமையாளர்கள் கடலை வாங்கினால்தான் அரிசி தரமுடியும் என்று நிபந்தனை விதிப்பதாகவும் அவ்வாறு இல்லாவிட்டால் அரிசியை வழங்க முடியாது எனவும் கூறுவதாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.அரச அதிபரின் அறிவிப்பு இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லையெனவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த நிபந்தனை காரணமாக அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துவோர் உட்பட ஏழைகள் பலர் தமது உணவுக்கென சங்கக் கிளைகளில் அரிசியைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு நிபந்தனையின் அடிப்படையில் அரிசியைப் பெற்றுக்கொண்ட உதயன் வாசகர்கள் பலர் அவற்றின் சிட்டைகளை உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டி ஏழை மக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாவனையாளர்கள் கேட்டுள்ளனர். (50-75-70-207)

## நவாலியில் தபால் பெட்டி சேதம்

நவாலி,ஜூலை27

நவாலி சென்.பீற்றர்ஸ் பிரதான வீதியில் அமைந்துள்ள தபால் பெட்டி பழுதடைந் துள்ளதால் அதற்குள் கடிதங்களைப் போட வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் தமது கடிதங்களை போடுவதற்கு தூர இடங்கள நாடிச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-100)

# கருணையால் வரும் துக்கம் கடவுளைத் துதிப்பது போலாகும்

இன்ப, துன்பம் தோன்றுவதற்கு, முக்கியமாக ஆறு காரணங்கள் உள்ளன.

முதல் காரணம் சுயநலம் ஆகும். தாயார் தன் சுயநலத்தைக் கருதி தன் மகன் இன்பமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். மகனும் அப்படியே!

இரண்டாவது காரணம் உறவு.

மூன்றாவது காரணம் அறிமுகம். எனக்கு அறிமுகமான ஒருவரை ரயில் நிலையத்தில் சந்திக்கிறேன். அவர் தன் பணப்பை எங்கோ தொலைந்து விட்டது என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். நானும் வருத்தப்படுகிறேன். அப்பொழுது யாரோ ஒருவர், ''இதுதானா தங்கள் பணப்பை?'' என்று கேட்டுக் கொண்டு வந்து கொடுக்கிறார். பணப்பை தொலைத்தவர் சந்தோஷப்படுகிறார். நானும் சந்தோஷப்படுகிறேன்.

நான்காவது காரணம் கருணை. எனக்கு முன்பின் தெரியாத ஒருவரை யாரோ துஷ்டன் அடித்துக் காயப்படுத்தி விட்டான். கருணை காரணமாக அது குறித்து நான் துக்கப்படுகிறேன். ''பரோபகார சிந்தனையுள்ள மக்கள்

ஞானக்கதிர்

பிறர் துன்பத்தைக் கண்டு. தாங் கள் துன்புறுகின்றனர். இது துக்கம் அல்ல இது எல்லோர் இதயத் திலும் உள்ள கடவுளை துதிப்பது ஆகும்.

ஐந்தாவது காரணம் எதையும் நம்புதல். ஒரு பசுமாட்டை ஒரு துஷ்டன் அடித்துக் கொண்டிருக்கிறான் என்று ஒருவர் வந்து சொல்லுகிறார். உடனே நான் துக்கப்படுகிறேன். இன்னொருவர் வந்து அத்துஷ்டனைப் பொலிஸார் பிடித்துக் கொண்டு போய்விட்டனர் என்று சொல்கிறார். நான் இன்பம் உறுகிறேன். மூன்றாவதாக ஒருவர் வந்து முதல் இருவரும் சொன்னது பொய் என்று சொல்லுகிறார். அப்பொழுது நான் இன்ப துன்பமின்றி நிம்மதியாக இருக்கிறேன்.

ஆறாவது காரணம் தன்மயமாகுதல். ஒரு நாவல் படித்துக் கொண்டிருக்கிறோம். அதன் பாத்திரங்களோடு நாம் தன்மயமாகி விடுவதால், அப்பாத்திரங்கள் சிரிக்கும் போது நாம் சிரிக்கிறோம். அப்பாத்திரங்கள் அழும்போது நாம் அழுகிறோம்.

ஆக, ஆராய்ந்து பார்த்தால், பிற பொருள்கள் மீது உள்ள பற்றுதலில் காரணமாகத்தான் நாம் இன்பதுன்பம் அடைகிறோம் என்பது தெரியவரும்.

நாடோடி.


# யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(நவோதயா பாடசாலை)

பகுதித்தலைவர் திருமதி பாக்கியலக்ஷ்மி கனகரத்தினம் அவர்களின்

## சேவைநலன் பாராட்டு விழா - 27.07.2007

### அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஆசிரியை



எமது வித்தியாலயத்தில் ஆசிரியையாக பகுதித் தலைவராக 27 ஆண்டுகள் சேவையாற்றி தனது 57வது அகவை நிறைவில் தனது கல்விச் சேவையிலிருந்து இன்று ஓய்வு பெற்றுக்கொள்ளும் திருமதி பா.கனகரத்தினம் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்.

எமது கல்லூரியின் வணிகக்கல்வியின் வளர்ச்சிக்கு அவரின் பங்களிப்பு போற்றுதற்குரியது. வணிக பாடத்தை மாணவர்களுக்கு கற்பித்து உயர்தர மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற காரணகர்த்தாவாக திகழ்ந்தார். கற்பித்தல் பணியுடன் கல்லூரியின் நிர்வாகக் கடமைகளில், இணைப் பாடவிதான செயற்பாடுகளில், அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்கு கொண்டு எல்லோருடைய மதிப்பையும் பெற்றவர். அவரிடம் வணிகக் கல்வி கற்ற மாணவர் சமூகம் இன்று வாழ்வின் சகல துறைகளிலும் முக்கியமான பதவிகளை அ லங்கரித்து வருகின்றனர்.

மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் பயிற்றுவிக்காமல் ஒவ்வொரு மாணவரினதும் உள்ளார்ந்த திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை வெளிக்கொணர்வதில் தனித்துவமான பங்களிப்கை அவர் செய்ததோடு மாணவர்களை நெறிப்படுத்துவதிலும் இதயசுத்தியுடன் செயற்பட்டவர்.

இனிய பேச்சு முகமலர்ச்சி அவருடைய நற்பண்புகள், சேவை மனப்பான்மை, திறமைமிக்க தலைமைத்துவப் பண்புகள் போன்றவற்றால் அனைவரது உள்ளங்களிலும் நீங்கா இடம் பிடித்தவர். எவரோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இவர், ஓய்வு காலத்தில் சீருடனும் சிறப்புடனும் அவர் தம் குடும்பத்தவருடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வி. மாணிக்கம், அதிபர்.

### நலன்பேணி நல்லுறவு வளர்த்த நல்லாசிரியை

கல்விப்பணியில் 34 வருடங்களாக சிறப்புடன் சேவையாற்றி இன்று ஓய்வு பெறும் எமது வித்தியாலய ஆசிரியை திருமதி பாக்கியலக்ஷ்மி கனகரத்தினம் அவர்கள் எம்மோடு இணைந்து ஆலோசனை வழங்கி எம்மை வழி நடத்திய நல்லாசிரியை ஆவார். ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் இல்லங்களில் நிகழும் இன்ப துன்ப நிகழ்வுகளில் கலந்துகொள்வதில் பேரார்வம் உடையவர். மாணவர்கள் நலனிலே அக்கறை கொண்டு கண்டிப்பும் கரிசனையும் காட்டும் அன்பான ஆசிரியை. இவர் தமது ஓய்வு காலத்தில் சீருடனும் சிறப்புடனும் அவர் தம் குடும்பத்தவருடன் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகி றோம்.

- ஆசிரியர் நலன்புரிக் கழகம், கல்விசாரா ஊழியர்கள்.

### நலம்பெற வாழ்த்துகின்றோம்

புகழ்பூத்த ஸ்ரான்லிக் கல்லூரி என அழைக்கப்படும் எமது பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த திருமதி. பாக்கியலக்ஷ்மி கனகரத்தினம் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.



திருமதி பாக்கியலக்ஷ்மி கனகரத்தினம் (S.L.T.S-1)

பிறந்த இடம்: அத்தியடி, யாழ்ப்பாணம்
பிறந்த திகதி: 28.07.1950
ஆரம்பக்கல்வி: யா/ஆனைப்பந்தி குருநாத சுவாமி வித்தியாலயம்
இடைநிலைக்கல்வி: யா/வேம்படி மகளிர் கல்லூரி

ஆசிரிய சேவை

கொ/அல்நாஸா மகா வித்தியாலயம்
18.06.1973 - 31.12.1974
கொ/பம்பலப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயம்
01.01.1975 - 13.03.1980
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாயலம்
12.05.1980 - 27.07.2007

### மாணவர்களின் நன்மதிப்புப் பெற்றவர்



பாடசாலைகளில் ஆசிரியர்களின் உன்னத செயற்பாட்டினாலேயே மாணவர்கள் சாதனைகளைப் படைக்கின்றனர் என்பதற்கு திருமதி பா. கனகரத்தினம் சிறந்த உதாரணமாகின்றார். இப்பாடசாலையில் மாணவர்களின் ஒழுக்கம் பேணுவதில் மிகவும் அக்கறையாகச் செயற்பட்டவர். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வணிகபாடம் கற்பித்து நல்ல பெறுபேறுகள் பெறக்காரணமாக இருந்தவர். இப்பாடசாலையில் முகாமைத்துவக் குழுவில் ஓர் அங்கமாக இருந்து சிறப்பாகச் செயலாற்றியவர். அவர் ஓய்வு காலத்திற்கு முன்பே ஓய்வு பெறுவது மாணவர் உயர்ச்சிக்கு ஓர் இழப்பாகும். ஓய்வு காலத்தில் சிறப்புற வாழ எனது வாழ்த்துக்கள்.

வே.தி.செல்வரத்தினம்,
வலயக் கல்விப்பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரும்.

### கோட்டக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்று. அது இன்றும் தனது மகிமை குன்றாது விளங்கி வருவது பாராட்டுக்குரியது. புகழ் பூத்த இக்கல்லூரியில் 27 வருடங்களாக மிகச் சிறந்த சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி. பாக்கியலக்ஷ்மி கனகரத்தினம் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவர். மாணவர்களின் ஒழுக்[...]ற்றுக் குழுவிற்குப் பொறுப்பாக இருந்து மாணவர்களை நல்வழிப்படுத்தியவர்.

பகுதித் தலைவராகப் பணிபுரிந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெரும்பணி செய்தவர். ஓய்வுபெற 3 வருடங்கள் இருப்பினும் தனது தேவைக்காக ஓய்வுபெறும் ஆசிரியை சகல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கே. வி. குணசேகரம், கோட்டக் கல்விப்பணிப்பாளர்
நல்லூர்/ கோப்பாய்.

### அன்பான ஆசிரியை

அறிவும் ஆற்றலும் அன்புடன் அரவணைப்பும் கொண்ட எங்கள் ஆசிரியை கற்பித்தலில் மட்டுமன்றி சகல துறைகளிலும் நாம் உயர்ந்திட வழி சமைத்தவர். எங்கள் நலனே தமது நலனாகக் கருதி மாணவர் நலன்புரிக் கழகத்தின் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டவர். நாம் ஒழுக்கத்தில் உயர்ந்திட வேண்டும் என்ற சிந்தை கொண்டவர். எமது ஆசிரியை ஓய்வுக் காலத்திலே இனிதேவாழ மனதார வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** எங்களின் பொன்னாங்காணித் தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப் புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவு திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டு கொள்ளலாம்.
(சி-52710)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் முருகேசு சிவபாலன்



அன்னையின் மடியில்
11.05.1955

ஆண்டவன் அடியில்
13.06.2007

*முத்தான மூத்த மைந்தன் நீயேயாகி*
*மூத்தவர்கள் இளையவர்கள் அன்ப வென்றே*
*காத்திருக்க எமை விட்டே கனடா சென்று*
*காலமெல்லாம் எமக்காக வாழ்ந்த சொத்தே*
*பார்த்திருந்தோம் உன் வரவைப் பாதை பார்த்தே*
*கேட்டதொரு பேரிடிதான் எங்கள் காதில்*
*ஆற்றிடவும் வகையறியோம் அன்புத் தேவே!*
*அரன் மைந்தன் பதமதிலே அமைதி காண்பாய்.*

அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல கொல்லன்கிராய் விநாயகரின் பாதங்கள் பணிகின்றோம்.

190 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

முடிவில்லா சோகத்துடன்:
**பெற்றோர், சகோதர சகோதரிகள்.**

(62921)

### நெடுந்தீவு ம.வியில் நவோதய நிகழ்வுகள்

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நவோதய நிகழ்வுகள் கடந்த வாரம் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நவோதய வாரத்தையொட்டி சிரமதானப்பணிகள், மொழித்திறன் ஆற்றுகைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (50-111)

### பண்டத்தரிப்பு பாடசாலையில் அபிவிருத்திப் பணி

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையில் கணனி செயற்பாட்டு அறை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் இப்புனரமைப்புப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை - யுனிசெவ் நிறுவனம் பாடசாலைச் சிறுவர் விளையாட்டு முற்றத்திற்கான ஊஞ்சல், சறுக்கு உட்பட மற்றும் பல சாதனங்களை வழங்கியுள்ளது. அத்துடன் உயர்தர வகுப்பு மாணவிகளுக்கான ஒரு தொகுதி தளபாடங்களை இந்த நிறுவனம் வழங்க முன்வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-135)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
22 - 04 - 1942



விண்ணில்
19 - 07 - 2005

## திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

*திதி: ஆடி பூர்வபக்க திரியோதசி (27.07.2007)*

ஆண்டுகள் இரண்டு கழிந்தன பிரிந்து
மாண்டு போயின வாழ்வின் வளங்கள்
மீண்டும் வந்தெமைச் சேர்ந்து கொள்வது
யாண்டும் நடவாது நாமறிவோம் நன்றாய்

தமிழ்நாடு விட்டுத் தாயகஞ் சென்று
நிம்மதி வாழ்வு வாழ நினைந்து
சொகுசாகவே சொந்த வீட்டைச்
சோடனை செய்தாய் சுகமாய் வாழ

விழுந்து கிடந்து நடக்க முடியாமல்
நலிந்து அழுந்தாது மின்னல் போல
மறைந்து போனது மறக்க முடியாது
உறைந்து போனது உள்ளம் யாவும்

நாமொன்று நினைக்க நமனொன்று செய்தான்
வாவென்று உன்னை வருத்தியே கொன்றான்
சாவென்ற உருவில் சடுதியாய் வந்து
சாய்த்துக் கொன்று ஓடியே போனான்

தாங்காது சோகம் தசாப்தங்கள் போனாலும்
மங்காதுன் நாமம் நீ மறைந்து போனாலும்
நீங்காதுன் நினைவுகள் நீயில்லாது விடினும்
எங்கிருந்தாலும் நீ ஏற்றமாய் வாழ்ந்திடு.

*உன் பிரிவால் வாடும்:* **கணவன், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.**

*85, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**ஆ.சுந்தரலிங்கம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

(62874)

# 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்

## திருமதி தியாகேஸ்வரி வேலாயுதபிள்ளை



27.06.2007 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியும் அன்னையும் ஆகிய திருமதி தியாகேஸ்வரி வேலாயுதபிள்ளை அவர்கள் நோயுற்றது தொடக்கம், இன்று வரை எமது ஆறாத்துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் முதலியோருக்கும், தொலைபேசி, தொலைநகல், கடிதம் முதலியன ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டு 28 நாள்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இல.04ஆம் விடுதியில் தங்கியிருந்த பொழுது அல்லும் பகலும் மருத்துவ சேவைசெய்த, வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள், என்போருடன் தலைமை ஏற்று கடைசிவரை நோயாளிக்கு ஏற்பட்ட நோயுடன் போராடிய Dr.சிவன்சுதன் ஐயாவிற்கும் நன்றி கூறுவதோடு,

அன்னையின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (27.07.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குச் சாவகச்சேரி டச் வீதியில் உள்ள 'ஐங்கரன் மணி மண்டபத்தில்' நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் உற்றார் உறவினர், நண்பர்கள் அனுதாபிகள் முதலியோரை மேற்படி நிகழ்வுகளில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

*கணவன்:* **தி.வேலாயுதபிள்ளை**
*பிள்ளைகள்:* **கோபிநாத்** (இறுதி ஆண்டு மருத்துவ மாணவன்) **பிரேம்நாத்** ([illegible]) **பிரவீணா** (2007 ஆம் ஆண்டு உயிரியல் மாணவி) **சேயோன்** (8ஆம் ஆண்டு மாணவன்)

"சாயிராம் மருந்தகம்"
கண்டி வீதி,
சாவகச்சேரி

(62759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல் விழிப்புணர்வுக்கு வழிகாட்டும் ஊடகவியலாளன்

மனித வாழ்க்கை போராட்டங்கள் நிறைந்தது. ஆனால் போராட்டமே வாழ்க்கை என்றாகிவிட்டால்.....?

ஆயுதம் தாங்கிய போராளிகளினது மட்டுமல்ல, எழுதுகோல் எடுத்த எழுத்தாளர்களின் - ஊடகவியலாளர்களின் - வாழ்க்கையும் உலகில் இன்று போராட்டம் என்றாகிவிட்டது. அதுவும் ஈழத் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலையோ மிக மோசம்.

இருப்பு என்ற வாழ்வியலுக்குள் இருந்து இல்லாமை என்ற சூனியத்துக்குள் - சாவுக்குள் - எக்கணமும் வல்வந்தமாகத் தூக்கி வீசப்படலாம் என்ற பேராபத்து நிலைக்குள்தான் ஈழத் தமிழ் ஊடகவியலாளர்களின் அன்றாடப் பணி இன்று கட்டவிழ்கின்றது.

இந்த அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து தாம் நேசிக்கும் ஊடகப் பணியை விட்டொழிந்தவர்கள் - விட்டொளித்தவர்கள் - பலர். ஆனால் உயிர் அச்சுறுத்தலைத் துச்சமாக மதித்துத் தமது சமூகக் கடமையை ஆற்றும் ஊடகவியலாளர்கள் இன்னும் பலர் நம் மத்தியிலே இருக்கின்றார்கள் என்பதே நிம்மதி தரும் விடயம்.

தங்களது உயிர் வாழ்க்கைக்கே அச்சுறுத்தல் - பேராபத்து - எழுந்துள்ள நிலையில், அதற்கு அஞ்சி ஓடாமல், அசட்டுத் துணிச்சலோடு, எதற்காக இத்தொழிலை - இப்பணியை - தமிழ் ஊடகவியலாளன் தொடரவேண்டும் என்ற கேள்வி எழுவது இயற்கையானது. இந்த வினாவுக்கு விடைகாணும் தேடலில் புகுந்தால், தன்னைப் பெரிதும் அம்பலப்படுத்தாமல் - வெளிப்படுத்தாமல் - தனது இனத்தின் மீட்சிக்காக, சமூகப் பிரக்ஞையோடு, ஒப்புயர்வற்ற சேவையாற்றிக்கொண்டிருக்கும் ஊடகப் பணியாளர்களின் பெருமை புரியும்.

ஆயுதங்களின் அராஜகங்கள் அரங்கேறும் இந்த அவலத்துக்கு மத்தியில் தன் எழுதுகோலின் மீதான சத்தியத்தோடு - சக்தியோடு - தன் பணியில் உறுதியாக இருக்கும் ஈழத் தமிழ் ஊடகவியலாளன் மெச்சப்படவேண்டியவன்; விஞ்சி மதிக்கப்பட வேண்டியவன்.

எழுத்தாளன் யாருக்காக எழுத வேண்டும்? ஏன் எழுத வேண்டும்? எதற்காக எழுத வேண்டும்? - இந்த வினாக்களுக்கான விடை புரிந்ததால்தான் - தெரிந்ததால்தான் - ஈழத் தமிழ் எழுத்தாளன் இவ்வளவு பேராபத்துக்கு மத்தியிலும் தன் உயிரைப் பணயம் வைத்து சமூகத்தின் நேரிய பயணத்துக்கு வழிகாட்டுவது ஏன் என்பது புரியும்.

எழுத்து ஒரு சமூகக் கலை. ஊடகம், சமூக வாழ்வியல் போக்கை நெறிப்படுத்தும் ஒரு பேரியக்கம். உலகியல் போக்கின் மீது வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் பலமான சக்தி அதற்கு இருக்கின்றது. சமூக மாற்றத்தின் உந்து சக்திக்கான ஊடகமாக ஊடகத்துறை விளங்குகிறது. மனித விழிப்புணர்வுக்கும், விடுதலைக்கும், சமூகப் பிரக்ஞை பற்றிய சுய எழுச்சிக்கும் அதுவே பாதை அமைத்துக் கொடுக்கக்கூடியது. அத்தகைய ஊடகத்துறையை சரியான செல்நெறியில் வழிப்படுத்துவதன் மூலம் சமூகப் பாதையை செப்பனிடும் பொறுப்பு எழுத்தாளனையே சேருகின்றது.

ஈழத் தமிழினம் இன்று வரலாற்றுத் திருப்பு முனையில் நிற்கிறது. விடுதலை மீட்சியா அல்லது அடிமைத்தளையின் தொடர்ச்சியா என்பதைத் தீர்மானிக்கும் வாழ்வா, சாவா போராட்டத்தில் அது இன்று தகிக்கின்றது.

இவ்வாறு வீறுகொண்டெழுந்திருக்கும் தன் சமூகத்தின் - இனத்தின் - இக்கட்டான சூழ்நிலையையும், அந்த இனத்தின் வாழ்நிலைப் பிரச்சினைகளையும், தனது மக்களின் அவலத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும், நெருக்கடிகளையும், நோவுகளையும், இடர்களையும், இழப்புக்களையும் அந்த இனத்தின் எழுத்தாளன் உதாசீனம் செய்யமுடியாது. வரலாற்றுப் போக்கிலிருந்து விலகி ஓடமுடியாது. தன் கடப் பாட்டிலிருந்து அவன் ஒதுங்கிவிடவோ, ஒளிந்துகொள்ளவோ முடியாது.

அபத்தமான தளைகளிலும் கட்டுகளிலும் இருந்து தனது மக்களை - இனத்தை - சமூகத்தை - விடுவிப்பதற்காக அவன் எழுதவேண்டும். உண்மையை, யதார்த்தத்தை வெளிக்கொணர அவன் எழுத்துப் புரட்சி புரியவேண்டும்.

இன விடுதலைக்காக- சுதந்திர வாழ்வியக்கத்துக்காக - நீதியான புற நிலையை ஏற்படுத்துவதற்காக- சமத்துவத்தையும், சமரசத்தையும் நிலை நிறுத்துவதற்காக - அவன் தன் கடன் பணி செய்ய வேண்டும்.

சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி, சக மக்களை சிந்திக்கத் தூண்டி, சரியான வழியில் செயற்பட வைத்து, விழிப்புணர்வுக்கு வித்தூன்றி, சமூக விடுதலைக்கு அவன் தளராது, சளைக்காது உழைக்க வேண்டும்.

எழுத்துகளின் சக்தி அபாரமானது. வாசகனின் அடி மனதில் கருத்துக்களை ஆழமாக விதைத்து, சிந்தனையைக் கிளரச் செய்து, எண்ணத்தை விரிவுபடுத்தி, உத்வேகத்தை ஊட்டி, மக்கள் தம் இலக்குகளை அடையச் செய்யும் ஆற்றல் எழுத்துகளுக்கு உண்டு.

தீக்குச்சியைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம். வீட்டையும் எரிக்கலாம். அது போன்றதே ஊடகவியலாளர்களின் எழுத்தும். சமூகத்தை எழுச்சிபெற வைக்கவும், வீழ்ச்சியுற வைக்கவும் அதனால் முடியும்.

சமூகப் பற்றுணர்வுள்ள எழுத்தாளன் சமூக விடுதலையை இலக்காகக் கொண்டு விளக்கேற்றுகின்றான்.

சமூகப் பொறுப்புணர்வற்ற எழுத்தாளன் சமூக வீட்டைச் சீரழித்து எரிக்கிறான்.

ஈழத் தமிழ் எழுத்தாளர்களோ தமது எழுத்துக் கலையை - சக்தியை - தமது மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வைத் தூண்டி இனவிடுதலைக்கு வழிகாட்ட சாதுரியமாகப் பயன்படுத்த விழைகின்றனர்.

சமூகப் பிரக்ஞையுடன், சமூக நல்வாழ்வுக்காக - இன விடுதலைக்காக - எழுதுவதால் தனது இருப்பிற்கும் மற்றவர்களது வாழ்விற்கும் அர்த்தத்தைத் தேடிக்கொடுக்க முனைகிறான் ஈழத் தமிழ் ஊடகவியலாளன்.

இவ்வாறு தனது சமூகத்தின் - இனத்தின் - எழுச்சிக்கு ஊக்கியாக அவன் இருப்பதால் அந்த எழுச்சியை அடக்கி, இனத்தை அடிமைப்படுத்த விளையும் தரப்புகளின் அதிகார ஒடுக்கு முறைக்கு நேரடியாக ஆளாகும் ஆபத்து அவனைச் சூழ்கிறது. அதனைத் துச்சமாக மதித்து இனப்பணியாற்றும் எழுதுகோல் போராளி மதிக்கப்பட வேண்டும். வரலாற்றுத் திருப்புமுனையிலே தன்மீது சுமத்தப்பட்ட சரித்திரக்கடமையை நிறைவுசெய்வதற்காகத் தயங்காது செயலாற்றும் அவனது சமூகப் பொறுப்புணர்வு விதந்து மதிக்கப்படவேண்டும்.

# கிழக்கில் அரசாங்கம் கைப்பற்றிய பகுதிகளில் தொண்டு நிறுவனங்களின் பணிக்குக் கட்டுப்பாடு

கொழும்பு,ஜூலை 27

கிழக்கு மாகாணத்தில் அரச படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் கட்டுப்படுத்தப்படும் என்று அந் நிறுவனங்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத் தகவலை உயர் அரச அதிகாரி ஒருவர் வெளியிட்டுள்ளார்.

சில நிறுவனங்கள் அப் பகுதிகளில் பெரும் எடுப்பில் செயற்படுவதாகக் காட்டிக்கொண்டாலும் மிகக் குறைந்த அளவிலேயே பணிகள் முடிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அப்பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது சில உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் அளவில் பணத்தை வெளிநாடுகளில் இருந்து பெற்றுள்ளன. ஆனால் சிறு அளவிலேயே பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். இந்த அமைப்புக்களின் பணிகளில் வெளிப்படைத் தன்மை இல்லையென்று குற்றஞ் சுமத்திய அவர் இவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்றார்.

இந்த நிலைமை தெரியவந்ததையடுத்து கிழக்கு பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிடிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து வாகரையில் கூட்டம் ஒன்றை நடத்தினார். அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களை மாவட்ட செயலாளரின் அனுமதி இன்றி எதுவித விஸ்தரிப்புப் பணிகளிலும் ஈடுபட வேண்டாம் என அக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அரசு சாரா நிறுவனங்கள் தமது விருப்பத்துக்கு ஏற்றாற்போல் திட்டங்களை செயற்படுத்த அனுமதிக்க வேண்டாம் என பிரதேசத் தளபதிகள் மற்றும் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அரச பிரிவிலிருந்து முறையான அங்கீகாரம் பெற்றவர்களை மட்டுமே அனுமதிக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். (ப)

## புவியியல்கழக கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை27.

யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 10மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'பிரதேசமூல வளப் பற்றாக்குறையும் திட்டமிடலின் அவசியமும்' என்னும் தலைப்பில் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு, மீள்நிர்மாணத்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் உரையாற்றுவார். (அ-1)

## பங்கீட்டு அட்டைக்கு சம்பா அரிசி விநியோகம்

நவாலி,ஜூலை27.

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு சம்பா அரிசி வழங்கப்படுகிறது.

3 அங்கத்தவர்களுக்கு உட்பட்ட குடும்பத்துக்கு 2 கிலோவும் 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 3 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.

இதேவேளை - இக் கிளைகளில் சீனி, மா என்பவற்றுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (50-100)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஒன்றரைக்கோடி யூரோ அன்பளிப்பு

### ஐரோப்பிய யூனியன் வழங்குகிறது

பிரஸல்ஸ், ஜூலை 27

இலங்கை இன மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மனிதாபிமான உதவிகளுக்கென ஐரோப்பிய ஒன்றியம் ஒரு கோடி 50 லட்சம் யூரோவை (2 கோடி 10 லட்சம் அமெரிக்க டொலர்) களை வழங்க உள்ளது.

இந்தப் பணத்தில் ஒரு பகுதி இலங்கையிலிருந்து அகதிகளாக வெளியேறி தமிழ் நாட்டில் தற்பொழுது வாழ்ந்து வருகிறவர்களின் நலன்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கையின் வன்செயல்கள் அதிகரித்திருப்பது குறித்து பெரிதும் விசனத்துக்குள்ளாகி இருக்கிறது. இந்த நிலை ஆயிரக்கணக்கான பொதுமக்களையும் சர்வதேச மனிதநேய பணியாளர்களையும் ஆபத்தான நிலைமைக்குள் தள்ளிவிட்டுள்ளது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நிலை என்று ஐரோப்பிய அபிவிருத்திக்கான உதவி ஆணையாளர் லூயிஸ் மைக்கல் கூறினார்.

உதவிபுரியும் முகவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வசதி இருக்க வேண்டும். அவர்களின் பணியாளர்களுக்கு பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்று மைக்கல் வற்புறுத்தினார்.

சகல தரப்புகளும் சர்வதேச சட்டங்களை மதிக்க வேண்டுமென நாம் வற்புறுத்துகின்றோம். மனிதாபிமான செயற்பாடுகள் மீதோ பணியாளர்கள் மீதோ நடத்தப்படும் தாக்குதல்களை நாம் கண்டிக்கின்றோம். -

நாம் வழங்கும் உதவிகள் சுத்தமான தண்ணீர், இருப்பிடம், உணவு, அடிப்படை ஆரோக்கியம், கல்வி மற்றும் சுகாதார சூழ்நிலை போன்ற அகதிகளின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்று ஆணையாளர் மைக்கல் மேலும் சொன்னார். (ப)

## இரசாயனவியல் பரீட்சை: இடம் மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ்.மத்திய கல்லூரியில் நாளை நடைபெறவிருந்த ஆஸ்திரேலியன் தேசிய இரசாயனவியல் கழகத்தின் இராசாயனவியல் அறிவுப் போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும், கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் இன்று காலை 9 மணி முதல் பரீட்சை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

# பிரதேச ஊடகவியலாளர்களுக்கு மக்கள் விருது; விளக்கம் அளிக்கும் ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை27

ஊடகத்தின் மக்கள்சேவை பெறுமதியை அதிகரிக்கும் பிரதேச ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மக்கள் சேவை ஊடக விருது வழங்கப்படவுள்ளது.

இந்தவிருது வழங்கும்திட்டத்தை யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அறிமுகம்செய்யும் ஒன்றுகூடல் எதிர்வரும் 8ஆம்திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.ஊடகவள நிலையத்தில் இடம்பெற வுள்ளது.

மேற்படி ஒன்றுகூடலில் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு விளக்கங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (1-120)

# நல்லூர் பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் ரத பவனி இம்முறை இல்லை

நல்லூர், ஜூலை 27

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காமம் தேவஸ்தான உற்சவத்தை முன்னிட்டு இடம்பெறும் ஆடிவேல் ரதபவனி இம்முறை இடம்பெற மாட்டாதென ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.குமாரக்குருக்கள் தெரிவித்தார்.

ஆலய உற்சவத்தையொட்டி யாழ். நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஆடிவேல் ரதபவனி வருடாந்தம் இடம்பெறுவது வழக்கம். தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, வழமையாக இடம்பெறும் ஆடிவேல் ரத பவனி இடம்பெறாது எனவும் -

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள தீர்த்த உற்சவத்தின் போது கரகாட்டம், பொம்மலாட்டம் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் எனவும் -

அன்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (1-111)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றார் தந்தை; அதில் சிக்குண்டு மரணமானார் 5 வயது மகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவரின் மகள், அந்த இடத்தில் விளையாடிய போது மின்சாரத்தில் சிக்குண்டு மரணமானார்.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் பாசையூர் பகுதியில் நேற்று இடம்பெற்றது. மின்சாரத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர் தோமஸ் கென்னடி ஒஸ்பசியஸ் கௌசிகா என்ற ஐந்த வயதுச் சிறுமியாவார்.

சம்பவம் தொடர்பாக யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று மரண விசாரணைகளை நடத்தினார். கடற்றொழிலாளியான தோமஸ் கெனடி ஒஸ்பசியஸ் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றிருக்கிறார். நேற்றுக்காலை மின் இணைப்புப் பெறுவதற்குப் பயன்படுத்திய வயர்களை அகற்றாமல் வெளியே சென்றுவிட்டார்.

அவரது மகள் நேற்று அந்தப் பகுதியில் ஓடி விளையாடியபோது அந்த வயர்களில் சிக்கி மரணமானார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

வாக்கு மூலங்களைப் பதிவு செய்த பின்னர் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 12 | சனிக்கிழமை 28.07.2007 |
| திதி : திரயோதசி | காலை 07.45 |
| நட்சத்திரம்: பூராடம் | பின்னிரவு : 02.51 |
| சுபநேரம் | : 09.02 - 04.32 |
| ராகுகாலம் | : 09.02 - 10.32 |

# எரிபொருள் விலையேற்ற நெருக்கடி; பரிகாரம் வேண்டி பூசைகள், யாகங்கள்

கொழும்பு, ஜூலை 27

எரிபொருள் விலையேற்றத்தால் எதிர்நோக்கும் நெருக்கடிக்கு பரிகாரம் வேண்டிப் பூசைகள், யாகங்களை தென்னிலங்கை மீனவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து எதிர்ப்பு வாரம் ஒன்றை இப்போது அனுஷ்டித்துவரும் தென்னிலங்கை மீனவர்கள், அந்த வாரத்தின் ஓர் அங்கமாக மத வழிபாட்டையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான பரிகாரம் கோரி ஆலயங்கள், தேவாலயங்களில் பூசைகள், யாகங்களை அவர்கள் நடத்துகின்றனர்.

மானிய அடிப்படையில் எரிபொருளை அரசு வழங்க முன்வந்தாலும், தங்களது நெருக்கடிக்கு தீர்வு கிட்டாது என்றும் மாதாந்தம் 9 ஆயிரத்து 250 ரூபாவை மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது என்றும் அகில இலங்கை மீனவர் சங்கத் தலைவர் அருண றொசாந்த தெரிவித்தார். (அ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு எதிராக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மேற்படி கட்சிகளின் முக்கிய தலைவர்களது ஆதரவாளர்கள் வெவ்வேறு பிரதான பாதைகள் ஊடாக பேரணியாக வந்து 'ஹைட்பார்க் கோணர்' திடலை அடைந்தனர்.

*மழை குறுக்கிட்டது*
*மக்கள் குலையவில்லை*

பேரணியில் மக்கள் அலை அலையாகத் திரண்டு வந்து கொண்டிருக்க, அந்த நேரம் பார்த்து மழை பெய்யத் தொடங்கியது. மழைத்தூறலுக்கு மத்தியில் மக்கள் 'ஹைட் பார்க்' மைதானத்தில் கூடியிருந்தனர். அவர்கள் எவரும் கலைந்து செல்லாமல் மழையில் நனைந்தவாறே அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

*நீலமும் பச்சையும்*

வழமையாக ஐக்கிய தேசியக் கட்சி பிரதான ஏற்பாட்டாளராக இருந்து ஒழுங்குசெய்யும் பேரணிகள், பொதுக்கூட்டங்களில் எங்கும் ஒரே பச்சை நிறத்தையே காணக் கூடியதாக இருக்கும். கட்சித் தலைவர்கள் ஆதரவாளர்கள் ஆடைகள், தொப்பிகள், அவர்கள் ஏந்தியிருக்கின்ற பதாகைகள் என்று அனைத்துமே பச்சை நிறமாக இருக்கும்.

ஆனால், நேற்றைய பேரணியில் நிலைமை சற்று வித்தியாசமாக இருந்தது. ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களின் பச்சைக்கொடிகள், பதாகைகளுடன் வர, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு - மங்கள, சிறிபதி அணியின் ஆதரவாளர்கள் தமது கட்சிக்கே உரித்தான நீல நிறக் கொடிகளை ஏந்தியவாறு பேரணியில் பங்கேற்றனர்.

ஒரு கட்டத்தில் 'ஹைட்பார்க்' மைதானத்தில் பச்சையும் நீலமும் இரண்டறக் கலந்து சங்கமமாகின.

ஸ்ரீல.சு.க. மக்கள் பிரிவு பிரமுகர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் தலைமையில் பிற்பகல் 4 மணியளவில் அங்கு பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

பொதுக்கூட்டத்தில் முதலில் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பாளி மொழிப் பேராசிரியருமான கலாநிதி ஒலிவர் விஜயநாயக்க உரை நிகழ்த்தினார்.

புத்த துறவிகள் அரசியலுக்கு வந்து மக்கள் பணி செய்யாமல் ஆசனத்தை அலங்கரிக்கின்றனர். பிரச்சினைகளை தேவையில்லாமல் ஊதிப் பெருப்பிக்கின்றனர் என அவர் ஜாதிக ஹெல உறுமயக்கட்சியைச் சாடி உரை நிகழ்த்தினார்.

பின்னர் உரை நிகழ்த்த வந்த ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க, ஜே.வி.பியையும், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வாங்கு வாங்கென வாங்கினார்.

*வந்து சேர்ந்தார் ரணில்*
*அதிர்ந்தது 'ஹைட்பார்க்'*

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்க மாலை 4.45 மணியளவில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'ஹைட்பார்க்' மைதானத்தை வந்தடைந்தார். அவருக்கு அங்கு வரவேற்பு மிகவும் பலமாக இருந்தது.

மைதானத்தில் ரணில் வந்திறங்கியதும் அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கரகோஷித்தனர். ரணிலுக்கு ஆதரவாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். இதனால், சிறிது நேரம் 'ஹைட்பார்க்' மைதானம் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அக்கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் ரவி கருணாநாயக்க, தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் முக்கியஸ்தர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி உட்பட பலர் அங்கு உரையாற்றினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, மகேஸ்வரன், மனோகணேசன் உட்பட எம்.பிக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பேரணி, இறுதியில் வந்தடைந்த ஹைட்பார்க் எங்கிலும், 'யுத்தம் மூலம் தீர்வுகாணும் சகோதரக் கம்பனியின் கொடூர ஆட்சிக்கு எதிராக', 'மனித உரிமைகளை மீறும் சகோதரக் கம்பனிக்கு எதிராக' 'மக்கள் சொத்தைச் சூறையாடும் சகோரதக் கம்பனிக்கு எதிராக', 'சிறுபன்மையினரைத் தாக்கும் சகோதரக் கம்பனிக்கு எதிராக' 'போப்' குற்றவாளிகளைக்காப்பாற்றும் சகோதரக் கம்பனிக்கு எதிராக', 'புலிகளுக்குப் பணம் வழங்கிய சகோதரக் கம்பனிக்கு எதிராக' என்று கோஷம் எழுப்பினர்.

பௌத்த பிக்குகள் உட்பட சகல மதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (சி)

## பாதுகாப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் இருந்த வடக்கே பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் வெடிபொருள்கள் ஏற்றிச் செல்லப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வாகனங்களில் எடுத்துச்செல்லப்படும் பொருள்கள் அனைத்தையும் கீழே இறக்கி, பூரண சோதனையின் பின்னர் ஏற்றும் கடும் நடைமுறை கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அவ்வாறு பொருள்களை சோதனை இடுவதால் உண்டாகும் தாமதத்தினால் எரிபொருள் மற்றும் பாவனைப் பொருளின் விநியோகத்தில் பெரும் தாமதம் உண்டாகிறது.

அதன் காரணமாக முக்கிய பொருள்களுக்கு தட்டுப்பாடும் விலை ஏற்றமும் தோன்றுகின்றது.

மதவாச்சியில் உள்ள சோதனை நிலையத்தில் பொருள்களை இறக்கிச் சோதனை இட்டு ஏற்றுவதால் பெரும் காலதாமதம் உண்டாகி விநியோகம் பிந்துகிறது. இது பெரும் பிரச்சியையாகி உள்ளது என்று உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் ஜொனாதன் கம்பல் கூறினார்.

பொருள்களை ஏற்றி இறக்கும் செலவுகள் அதிகரிப்பதாலும், அவற்றை உரிய மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லும் போக்குவரத்து செலவுகள் உயர்வதாலும் பொருள்களின் விலைகள் உயர்கின்றன என்று ஐ.ஏ.எஸ்.சியின் ஜூலை மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களை எடுத்து வருவதில் உள்ள தாமதத்தினால் பற்றாக்குறையும் கியுக்களும் தோற்றுவிக்கப்படுகின்றன.

மன்னார் பகுதியில் ஒருவருக்கு ஒரு லீற்றர் எரிபொருளே வழங்கப்படுகிறது - என சகவாழ்வுக்கான அமைப்பின் இயக்குநர் பிரான்ஸிஸ் டெயுக்ரர் கூறினார்.

பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்களைப் பொறுத்தவரையில் தட்டுப்பாடு உள்ளது. நாம் எமது தேவைகளை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்து அதன் அனுமதிக்காக காத்துக்கிடக்க வேண்டி உள்ளது. கிடைக்கும் எரிபொருளை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருகிறோம் - என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொருள்களை ஓமந்தைச் சோதனை நிலையத்துக்கு ஊடாகவே எடுத்து வர வேண்டும். முன்னர் மாதாந்தம் 300 லொறிகளில் எரிபொருள்கள் எடுத்து வரப்பட்டன. இப்போது 120 லொறியில் மட்டுமே கொண்டுவர முடிகிறது - என்றும் அவர் தெரிவித்தார்.

வன்னி நிலைமை குறித்து விவரித்த உலக உணவுத் திட்ட அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

வன்னி மாவட்டங்களில் உள்நாட்டு உற்பத்திகள் தாராளமாகக் கிடைப்பதாலே பெரும் உணவுத் தட்டுப் பாட்டைத் தவிர்க்க முடிவதாகக் கூறினார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் பேச்சாளர் இராசையா இளந்திரையன் வன்னி நிலைமைகள் பற்றி பின்வருமாறு கூறினார்.

அரிசி, மரக்கறிகள், மற்றும் இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பொறுத்தவரையில் சமாளிக்க முடியும்.

மாவட்டங்களுக்கு வெளியே இருந்து எடுத்து வரப்படும் பொருள்களுக்கே தட்டுப்பாடும் விலை உயர்வும் உள்ளன. மருந்து வகைகளுக்கும் குழந்தைகள் உணவுகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது - என்றார். (அ)

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் பத்திரமுல்ல பகுதியிலும், அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தலைமையில் மொரட்டுவ பகுதியிலும், ஹோமாகம பகுதியில் மாகாணசபை உறுப்பினர் காமினி திலக்க தலைமையிலும் அரசிற்கு சார்பான பேரணிகள் நடைபெற்றன. இருதரப்பு ஆதரவாளர்களுக்கும் இடையே பேரணிகளின் போது முறுகல் நிலை ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டதால் பெருமளவு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஏராளமான கலகம் அடக்கும் பொலிஸாரும் ஆங்காங்கே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். எனினும் எங்கும் வன்முறைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## கல்வியியற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதி வழங்கவில்லை. அதன் காரணமாக இந்நியமனம் வழங்கப்படும் பணி இடை நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது நியமனம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் நியமனக் கடிதங்கள் நேற்று முதல் அனுப்பப்பட்டு வருவதாகவும் மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நியமனக் கடிதம் கிடைத்ததும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் பதவியேற்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-1)

## வடக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயல்கள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததால் உப தபாலகங்கள் மூடப்பட்டன. தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் மக்களுக்கு தபால் சேவையை வழங்க அந்த உப தபாலகங்கள் திறக்கப்படவேண்டியது அவசியம் என அமைச்சர் தமது பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தார்.

26 உப தபாலகங்களின் தபாலதிபர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்காக 57 லட்சம் ரூபாவையும் தபாலகங்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 38 லட்சம் ரூபாவையும் வழங்குவதற்கு திறைசேரிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. (அ-1)

## சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் 3ஆம் ஆண்டு விழா நாளை

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் 3ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகபதில் துணைவேந்தர்பேராசிரியர் இ. குமாரவடிவேல் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் சதாசிவம் கனகசபை, வைத்தியகலாநிதி சிவபாதநாயகி கனகசபை தம்பதியினரும் கலந்து கொள்வர்.

வாழ்த்துரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ். மருதலிங்கம், யாழ். கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் ஆகியோர் வழங்குவர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ-1)

## சேது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப் போவதாகவும் - ஒக்ரோபர் 26ஆம் திகதி லட்சக் கணக்கான மக்கள் அங்கு கூடி பாலத்தைப் பாதுகாக்கும் இயக்கத்தில் குதிப்பர் என்றும் - அதன் செயலாளர் பிரவீன் ருக்காடியா தெரிவித்தார். (அ-1)

## ஜேர்மன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை நினைவில் கொண்டு சுவிஸ் தமிழ் நட்புறவுக் கழகத் தலைவர் பேர்னார்ட், சுவிஸ் தமிழ் நட்புறவுக்கழகச் செயலாளர் திருமதி எவிலன் பேர்னார்ட் ஆகியோர் நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

பின்னர் தாயக விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிரை ஈந்த மாவீரர்களுக்கும் 1983 இல் இனக்கலவரத்தில் பலியான அப்பாவிப் பொதுமக்களுக்குமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழர் மீதான கடந்தகால, நிகழ்கால வன்முறைகளைச் சித்திரிக்கும் கலை நிகழ்வுகளும், உரைகளும் இடம்பெற்றன.

ஜேர்மன் வாழ் தமிழ் மக்களால் 'சாவிலும் வாழ்வோம்' கறுப்பு ஜூலை நிகழ்வு ஜேர்மனிய நகரங்களில் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் ஜேர்மனிய நகரங்களான முனஸ்ரா, முன்சன், நியூண்பேர்க், ஸ்ருட்காட், மன்கைம், பிராங்போட், சாபுறுக்கன், டோட்மூண்ட், வூப்பெற்றால், நொய்ஸ், முன்சன்கிளட்பாக், கொற்றிங்கன், பிறிமன், பெர்லின், கனோவர், ஹம்பேர்க் ஆகியவற்றில் கடைப்பிடிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஜேர்மனியின் 17 நகரங்களில் தொடங்கிய நிகழ்வுகளில் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா அரச படைகளினால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை ஜேர்மன் வாழ் தமிழ் மக்கள் அகவணக்கம் செலுத்தி நினைவுகூர்ந்தனர்.

இந்நிகழ்வுகள் நடைபெற்ற நகரங்களின் மத்தியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடங்களில் 83 ஜூலை இனக்கலவரத்தை விளக்கும் படங்கள், படுகொலை செய்யப்பட்ட மக்களின் புகைப்படங்கள் போன்றவை ஜேர்மனிய மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஜூலைச் சம்பவம், ஸ்ரீலங்கா அரச படைகள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் தமிழினப்படுகொலைகள் ஆகிய விவரங்கள் அடங்கிய ஜேர்மன் மொழியிலான துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களில்தமிழ் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். பிராங்போட், ஸ்ருட்காட் ஆகிய நகரங்களில் தமிழர்களின் பாரம்பரிய நடனங்களும் ஜேர்மனிய மக்களுக்கு நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டது. (சி)


**MY COMPUTER** தமிழ் கணனி மாத இதழ் சகல இடங்களிலும்.
வெளியீடு: SPEED IT net, 021 4591871.

**வெளிவந்துவிட்டது**
G.C.E. (A/L) மாணவர்களுக்குரியது
நடைமுறை விடயங்கள்
(வணிகக்கல்வி, பொருளியல்)
சி.சிறிவிமலகாந்தன்
(யா/ நெல்லியடி மத்திய மகா வித்தயாலயம்)
முன்னணி புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**மாபெரும் இறுதிக்கருத்தரங்கு**
வணிகக்கல்வி
K. முரளி
B.S.+ (1)
28.07.2007 7.30 - 12.30
B.S.+ (2)
29.07.2007 7.30 - 12.30
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
அனுமதிக்கட்டணம் 200/- மட்டும்
**நாவலர்**
(ஆனைப்பந்தி).

**2007 மாணவர்களுக்கான புவியியல் முன்னோடிப் பரீட்சை**
Paper - 1 02.08.2007 வியாழன் கா. 9
Paper - 2 03.08.2007 வெள்ளி கா. 9
Paper - 3 04.08.2007 சனி கா. 9
நடைபெறும் இடங்கள்
D.M.I. - யாழ்நகர், ஐடியல் - நீராவியடி
வீனஸ் - மானிப்பாய், ஐடியல் - சண்டிலிப்பாய்
A.I.E. - ஆவரங்கால், Subra (14) - சித்தன்கேணி
கோணேஸ் மற்ஸ் அக்கடமி - அளவெட்டி
ஐடியல் - காரைநகர்.
பதிவுகள் யாவும் 30.07.2007 இற்கு முன்னர் அந்தந்த இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* இந்நிறுவனங்களில் கற்காத மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.

**கணக்கீடு**
P. பகீரதன்
A/L 2008
பங்குடமை
Sat., Sun. 12 - 1 P.m.
Paper Class
Sat., Sun. 7 - 8A.m.
ஆரம்பம் : 28.07.2007 (சனி)
**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**தரம் 5**
புலமைப்பரிசில் பரீட்சை
வெற்றி இலக்கு 10
**தரம் 4**
வெற்றி இலக்கு 01
பரீட்சைகள் 30.07.2007 இல் பாடசாலையில் நடைபெறும்.
**தயா அச்சகர்**
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**கருத்தரங்கு**
பொருளியல்
N.B. கஜீதரன்
கொழும்பு, கண்டி மாவட்டங்களின் பிரபல பொருளியல் வினாப்பத்திரங்களின் மீட்டல்
காலம்: 29, 30, 31ஆம் திகதிகளில்
2.30 - 5.30 P.M
ஆரம்பம்: 29.07.07 (ஞாயிறு)
அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.
**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி

யா/ அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முன்னாள் ஆசிரியர்
**சி. முரளிதரன்**
அவர்களின் தந்தை **இராசதுரை சிவலிங்கம்** அவர்கள்
26.07.2007 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் எமது ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/ அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயம், அனலைதீவு. (62969) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org